# பெரும்பாணாற்றுப்படை உணர்த்தும் வாழ்வியல்

முனைவர் க திலகவதி
தமிழ்த்துறைத் தலைவர், சுயநிதிப்பிரிவு ,
காமராஜ் கல்லூரி , தூத்துக்குடி.
thilagaphd1976@gmail.com

10

**ஆய்வுச் சுருக்கம்:**

அரசு என்ற ஓர் அமைப்புத் தோன்றுவதற்கு முன்பு மனிதன் இயற்கைக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்து வந்தான் . அம்மனிதன் நாட்கள் செல்ல ச் செல்ல நாகரீக வளர்ச்சி அடைந்தான் . அதன் காரணமாக மனிதனுக்கென அறம் சார்ந்த பண்பாடு உருவாகியது . அப்பண்பாட்டின் காரணமாக மக்கள் தங்களுக்குள் ஓர் கட்டுப்பாட்டினை ஏற்படுத்திக் கொண்டனர் . அதன்படி மக்கள் தங்களை த் தன்னலமில்லாத ஒரே விதமாக நடத்த பொதுவான ஒரு தலைவனை அமைத்துக் கொண்டனர் . அத்தலைவனை அதுவரை தாம் தெய்வமாகக் கருதிய இயற்கைக்குக் நிகராக மதித்து அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க ஒப்புக்கொண்டனர் . அதன் விளைவாக ஒரு கூட்டமைப்பு தோன்றியது . அதுவே அரசு என்று அழைக்கப்பட்டிருக்கலாம் . அப்படித் தோன்றிய தலைவன் மக்களைக் காக்கின்ற நிலையில் மன்னன் எனப்பட்டான். மன்னன் நாட்டு மக்களுக்கு உயிராகக் கருதப்பட்டான். நாட்டைக் காப்பதில் காவலனாகவும் தன்னைச் சார்ந்தவர்க ளைக் காப்பதில் தாயாகவும் விளங்கினான் . நேர்மையான ஆட்சியின் சின்னமாக செங்கோல் போற்றப்பட்டது.

தம்மை நாடி வரும் இரவலர்க ளைக் காக்கவும் தம் சுற்றத்தைக் காக்கவும் பிறர் தம்மைப் போற்றி வாழும் புகழுக்காகவும் கொடை அளிப்பதை மன்னர்கள் மேற்கொண் டிருந்தனர். குடிமக்களைக் காப்பதைத் தம் முதன்மையான அறமாகக் கொண்டிருந்தனர் . பெருமைக்காகவும், புகழுக்காகவும், செல்வத்தைப் பெறுவதற்காகவும் நாட்டின் எல்லையைப் விரிவுபடுத்துவதற்காகவும் போர் முறை மேற்கொள்ளப்பட்டது . எளியவர்களுக்குத் துன்பம் ஏற்படாத வகையில் அப்போ ர் நிகழ்வுகள் வகுக்கப்பட்டன . மன்னர்களுக்கு என வகுக்கப்பட்ட நிலப்பாகுபாடுகளும் குறிப்பிட்ட வாழ்க்கை முறைகளும் மதம் சார்ந்த அறங்களாகப் போற்றப்பட்டன . அவ்வகையில் பெரும்பாணாற்றுப்படை உணர்த்தும் வாழ்வியலைக் காண்பதாக இவ்வாய்வுச் சுருக்கம் அமைகிறது.

**திறவுச்சொற்கள்:**

தொல்காப்பியம் , பதிற்றுப்பத்து, புறநானூறு, அகநானூறு, மதுரைக்காஞ்சி.

**முன்னுரை**

நம் தமிழர்கள் இயற்கையோடு இ யைந்த வாழ்க்கை வாழ்ந்தனர் . தம் வாழ்வில் இடம்பெற்ற அனைத்து அனுபவங்களையும் இலக்கியத்தில் அமைத்தனர் . அதனால் அவ் விலக்கியங்கள் உயிரோட்டம் கொண்டதாக விளங்கின. புதிய கற்காலத்தில் பண்பட்ட வாழ்வைத் தொடங்கிய மனித சமூகம் நாட்கள் செல்லச் செல்ல பல வளர்ச்சிகளைக் காணத் தொடங்கியது . இதனால் மக்களின்

நாகரிகமும் பண்பாடும் மேம்பாடடைந்தது . இதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தவை அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள். அவ்விலக்கியங்கள் உணர்த்திய வாழ்வியலில் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் மக்களின் மனதைப் பண்பட்டவையாக மாற்றின. அந்த வகையில் அமைந்த சங்க இலக்கியமான பத்துப்பாட்டில் அமைந்த பெரும்பாணாற்றுப்படை உணர்த்தும் நம் தமிழர்களின் வாழ்வியலை இக்கட்டுரை ஆய்கிறது.

**பெரும்பாணாற்றுப்படை:**

பத்துப்பாட்டில் நான்காவதாக அமைந்த பெரும்பாணாற்றுப்படை தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியதாக அமைந்துள்ளது . இளந்திரையனிடம் பரிசு பெற்ற பாணன் மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்துவதாக இந்நூல் அமைகிறது. இதனை ,

" கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன்எதிர்ச் சொன்ன பக்கமும் "- [1]

என்று தொல்காப்பியம் சுட்டுகின்றது .

**பெரும்பாணன்:**

இசைவாணனை அக்காலத்தில் பாணன் என்றனர் . பாணன் குடும்பத்திலுள்ள அனைவரும் இசைத்தமிழை வளர்ப்பதில் இன்பம் கண்டனர் . வறுமைக் காலத்தில் அவர்களது பிழைப்பு இசையால்தான் நடந்து வந்தது . பேரியாழ் மீட்டுபவன் பெரும்பாணன் . பெரும்பாணன் ஒருவன் தொண்டைமானிடம் ஆற்றுப்படுத்தப்படுகிறான். ஆற்றுப்படுத்தப்பட்ட ஒரு பாணன் வறுமையினால் வாடி பொருள் வேண்டி வரும் மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்துவதாக இந்நூல் அமைகிறது . பாணன் வாழ்வு மலரப்போவதைப் பாதிரி மலர் வேனிற் காலத்தில் தன் பசுமையான இலைகள் உதிர்ந்து போய் பூக்கள் பூத்துக் குலுங்கும் காட்சி குறிப்பால் உணர்த்துகின்றது.

***"பாசிலை ஒலித்த பராஅரை பாதிரி***
***வள் இதழ் மாமலர்....... "(பெரும். 4, 5)***

**அரசின் சிறப்பு:**

ஒரு நாட்டின் வாழ்வு ஆட்சித்திறனில் இருக்கின்றது . மக்களைக் காக்கும் முறை , ஆட்சி செய்யும் முறை முதலியவை அரசன் எத்தகைய தன்மை உடையவன் என்பதைக் காட்டிவிடும் . அதனால் அரசன் சிறந்தவனாக இருத்தல் நாட்டிற்கு நலம் பயப்பதாக அமையும் . கொடைத்தன்மை மிக்கவனாக இருக்கின்ற போதும் எளியவர்களை ஆதரிக்கின்ற போதும் அரசனின் சிறப்புகள் பெரிதும் வெளிப்படுகின்றன. நல்லாட்சி மிக்க நாட்டில் தான் அனைத்து அறங்களும் சிறந்து விளங்கும்.

இளந்திரையன் காவல் நிலத்தில் வழிப்போக்கர்களை அலறும்படி தாக்கி , அவர்களிடமுள்ள பொருட்களை வழிப்பறி செய்யும் திருட்டு இல்லை . காரணம் அவனது காவலர்கள் வழிப்போக்கர்களுக்குத் துணை வருவர். இடி தாக்காது, பாம்பு பயம் இல்லை, காட்டு விலங்குகளாலும்

துன்பம் இல்லை, எங்கும் தங்கலாம், எங்கும் பாதுகாப்பு. களைப்பு தோன்றும் போதெல்லாம் விரும்பிய இடங்களில் தங்கலாம்.பின்னர் தொடரலாம்.

இதனை,

***"அத்தம் செல்வோர் அலற தாக்கி***
***கைப்பொருள் வெளவும் களவு ஏர் வாழ்க்கை***
***கொடியோர் இன்று அவன் கடி உடை வியன் புலம்***
***உறுமுப உரறாது அரவும் தப்பா***
***காட்டு மாவும் உறுகண் செய்யா வேட்டாங்கு***
***அசைவுழி அசைஇ நசைவுழி தங்கி***
***சென்மோ இரவல சிறக்க நின் உள்ள"***

(பெரும்.39-45)

இதனையே மோசிகீரனாரும் புறநானூற்றில்,

*"மன்னர் உயிர்த்தே மலர்தலை உலகம்*
*அதனால் யான் உயிர் என்பது அறிகை*
*வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே. "- 2*

**செங்கோலாட்சி:**

செங்கோலாட்சி என்பது மன்னனின் நீதியின் தன்மையைக் கூறும் சொல்லாகும் . முறையறிந்து நீதி வழங்குதலும் முறையறிந்து அறம் செய்தலும் நாட்டைக்காத்தலும் மக்களைப் பேணுதலும் அரசின் தலையாய அறங்களாகும் . மன்னன் நடுவு நிலை மாறாமல் இருக்கின்ற போதுதான் நாடு சிறக்கும் . அரசனின் கையில் ஏந்தியுள்ள செங்கோலானது அரசனின் ஆட்சி நேர்மையானது என்பதை எடுத்துக்காட்டுவதாகும் . அரசனின் நல்லாட்சிக்கு அடையாளமாக வெண் கொற்றக் குடையும் செங்கோலும் கொள்ளப்பட்டது.

உலகிலுள்ள உயிர்களைக் காக்கும் மூவேந்தர்களைச் சங்கு என்றால் இளந்திரையன் அச்சங்குகளிலே சிறந்து விளங்கும் வலம்புரிச் சங்கு போன்றவன் . மறப்போரை விலக்கிவிட்டு அறத்தை மட்டுமே செய்யும் செங்கோல்தான் அவன் ஆட்சி . நீங்களும் சென்றால் வறுமை தீரும் வளங்களைப் பெறலாம்.

***"வலம்புரி அன்ன வசை நீங்கு சிறப்பின்***
***அல்லது கடிந்த அறப் புரி செங்கோல்***
***பல்வேல் திரையன் படர்குவிர் ஆயின் "***

(பெரும்- 36, 37)

இதனை,

***"அறம்புரிந் தன்ன செங்கோல் நாட்டத்து***
***முறைவேண்டு பொழுதின் பதன் எளியோர்" - 3***

என்னும் பாடல் அடிகள் இக்கருத்துக்கு அரண் செய்கின்றன.

**போரில் அறமும் வெற்றியும்**

சங்ககாலத்தில் போரிலும் அறத்தினைக் கடைப்பிடித்தனர் . தம்மை பணிந்து வருவோர் மீது போர் செய்யாதும் தம்மை எதிர்ப்போரை வெற்றி பெறுவதையும் கொள்கையாகக் கொண்டிருந்தனர்.

திரையனை விரும்பி அவனிடம் செல்பவர்களுக்கு அவன் பாதுகாவலனாக விளங்குவான் . நண்பர்கள் விரும்பியதை அவன் மழையைப்போல் அள்ளித் தருவான் . பகைவர்களை அவன் தீயைப்போல் சுட்டெரிப்பான் . அவனை எதிர்த்துப் போரிட்டவர்களின் நிலம் பாழாகும் . அவனை நயந்து வாழ்வோரின் நிலம் பொன் கொழித்துப் பூக்கும் . மலையிலிருந்து இறங்கும் அருவி கடலை நோக்கிச் செல்வது போல் பிற அரசர்களும் மக்களும் அவனது நட்பைப் பெறுவதற்காக அவனைச் சூழ்ந்து வந்து கொண்டேயிருப்பர் . எப்பொழுதும் அவனைச் சுற்றிப் படர்ந்து கொண்டேயிருப்பர் . மேலும் பணிந்து கொண்டியிருப்பர். இதனை,

***"நயந்தோர் தேஎம் நன் பொன் பூப்ப***
***நட்பு கொளல் வேண்டி நயந்திசினோரும்***
***துப்பு கொளல் வேண்டிய துணையிலோரும்***
***கல்வீழ் அருவிகடல் படர்ந்து ஆங்கு***
***பல்வேறு வகையின் பணிந்த மன்னர்"***

*(பெரும் : 424-428 )* என்கிறது.

இதனையே,

***"அரசவை பணிய வறம் புரிந்து வழங்கிய***
***மறம்புரி கொள்கை "*** - 4

என பதிற்றுப்பத்தும்

***"நல்லிசை வேட்டம் வேண்டி வெல்போர்ப்***
***பாசறை யல்லது நீயொல்லரியே "*** - 5

என புறநானூறும்

***"அரும்புகழ் மேவலொடு கண் படையிலனே"*** - 6

என அகநானூறும் சுட்டுகின்றது .

**வழிபடுகடவுள்:**

கடவுள், தெய்வம் எனும் சொற்கள் அனைத்துத் தெய்வங்களையும் குறிப்பிடுவதாகவே சங்க இலக்கியங்களில் பயின்று வருகின்றன. கொற்றவை, முருகன், திருமால் போன்ற தெய்வங்களை வழிபடுவதைச் சுட்டுகின்றன .

இதனை,

*"காந்தள் அம் சிலம்பில் களிறு படிந்து ஆங்கு*
*பாம்புஅணை பள்ளி அமர்ந்தோன் ஆங்கண்*
*வெயில் நுழைபு அறியா குயில் நுழை பொதும்பர்"*

(பெரும்: 372-392 )

*"கடம்பு அமர் நெடுவேள் அன்ன மீளி"*

(பெரும் : 75 )

என்ற பாடல் வரிகள் சுட்டுகின்றன.

இதனையே,

*"கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்*
*சீர்மிகு நெடுவேட் பணி " - [7]*

என்ற மதுரைக் காஞ்சி பாடலும் உணர்த்துகின்றன .

**விழாக்கள்:**

மக்களின் துன்பத்தை மறக்கச் செய்து அவர்களை இன்பமடையச் செய்வது விழாக்கள் . இவ்விழாக்கள் மனித மனங்களுக்கும் புத்துணர்ச்சியைத் தருவனவாகவும் அத்துடன் ஒரு சமுதாயம் மலர்ச்சி அடைய அடிப்படைக் காரணமாகவும் விளங்குகின்றன . மக்களிடையே நின்று நிலவிய விழாக்கள் உள்ளத்துக்கு மகிழ்ச்சியினையும் செயலாற்றுவதற்குரிய நம்பிக்கையினையும் மனிதனுக்கு அளிக்கின்றன. மக்கள் விரும்பி ஏற்றுக் கொண்டாடும் நிகழ்ச்சியாதனின் அது விழா எனப் போற்றப் பெறுகின்றது. விழாவிற்குரிய காலமாக வேனிற்காலத்தைக் குறிப்பிட்டனர். விழாக்களின் இயல்புக்கு ஏற்ப காலையிலும் மாலையிலும் கொண்டாடப்பட்டன. பொதுவாக வேனில் காலத்தில் விழாக்கள் நடத்தப்படுவது இன்றுவரை வழக்கத்தில் உள்ள ஒன்று.

வேனில் விழாவே "பூமலி பெருந்துறை செவ்வி " என்று போற்றப்படுகிறது. இது திருமாலுக்கு நடத்தப்படும் விழா. துறக்கம் (சொர்க்கம்) அடைதல் என்பது இயலாத ஒன்று. உண்மையில் பொய்யாத மரபினைக் கொண்டு மண்ணுலகில் இருக்கும் துறக்கம் தான் வேனில் காலமும் அதில் கொண்டாடப்படும் விழாவும் ஆகும். காஞ்சியில் இவ்விழா நடைபெறும். இதனை,

*"பெறற்கு அரும் தொல்சீர் துறக்கம் ஏய்க்கும்*
*பொய்யா மரபின் பூமலி பெரும்துறை. "*

(பெரும்- 388,389)

என்ற இப்பாடல் சுட்டுகின்றது.

இதனையே அகநானூறும்,

*"முழவுமுகம் புலராக் கலிகொ ளாங்கண்*
*கழாஅர்ப் பெருந்துறை விழவி னாடும் " - [8]*

என்று குறிப்பிடுகின்றது.

**முடிவு:**

திரையனை நாடுவோர் வாழ்வு மலரும் என்பதனையும் அவனது நாட்டில் இயற்கை, விலங்கு என எவையும் துன்பம் தராது பாதுகாப்பு தருவன, என்பதையும் அறத்தை மட்டுமே கடைபிடிக்கும் செங்கோலாட்சி கொண்டது திரையனின் ஆட்சி என்பதையும் விளக்குகிறது.

போரில் அறவழியைப் பின்பற்றுதல், ஈடுபடும் போர்களில் வெற்றி, இறைவழிபாடு, விழாக்கள் என மக்களின் வாழ்வியலை இந்நூல் கொண்டுள்ளது என்பதனையும் விளக்குகிறது.

**அடிக்குறிப்பு**

1. தொல். பொருள்.புறத், 88: 3-6
2. புறநானூறு, 186: 1-4 (ப. 351)
3. மேலது, 35: 14-15 (ப.86)
4. பதிற்றுப்பத்து, 84: 9-10 (ப. 404)
5. புறநானூறு, 31: 5-6 (ப. 78)
6. அகநானூறு, 214: 7 (ப.248)
7. மதுரைக்காஞ்சி, 613, 614
8. அகநானூறு, 222: 4-5

**பார்வை நூல்கள்**

1. இளம் பூரணர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம்,
சாரதா பதிப்பகம்,
சென்னை-05, 2008.

2. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, பதிற்றுப்பத்து,
தமிழ்மண் அறக்கட்டளை,
பெரியார் குடில்,
முதற்பதிப்பு- 2008.

3.ந.சி.கந்தையா, அகநானூறு,
தமிழ்மண் அறக்கட்டளை,
பெரியார் குடில்,
முதற்பதிப்பு- 2008.

4. புலியூர்க்கேசியின் உரை, புறநானூறு,
. பாரிநிலையம், 184,
பிராட்வே, சென்னை- 108,
மறு பாதிப்பு 2011.